Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 329
செவ்வாய்க்கிழமை
ஐப்பசி 09 ஆம் நாள்
26 ஒக்ரோபர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## கொரோனாச் சாவு சடுதியாக உயர்வு

கொழும்பு, ஒக். 26
இலங்கையில் மேலும் 29 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன இதனை உறுதிப்படுத்தியுள்ளார் என்று 15

## ஆரியகுளத்தின் அபிவிருத்தியில் நாகவிகாரை தலையிடக்கூடாது!

எந்த மதத்துக்கும் அது உரியதல்ல: ஐங்கரநேசன் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில், யாழ். மாநகரசபை மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளில் நாகவிகாரை ஆரம்பத்திலிருந்தே தலையீடு செய்துவருகிறது. குளத்தின் நடுவே தியான மண்டபம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்திவந்த நாகவிகா 15

கொரோனாவால்

## தென்மராட்சியில் மேலும் மூவர் சாவு

சாவகச்சேரி, ஒக். 26
தென்மராட்சிப் பிரதேசத்தில், கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் தரப்புத் 15

மொட்டுக் கூட்டணியிலுள்ள

## 11 பங்காளிக் கட்சிகளும் நாடகம் ஆடுகின்றன!

கொழும்பு, ஒக். 26
"அரச பங்காளிக்கட்சிகள் அழுது, புலம்பி ஊடகக் கண்காட்சியையே நடத்திவருகின்றன. மாறாக இதுவரை ஒரு போராட்டத்தைக் 15

# ஆளும்கட்சிக்குள் வெடித்தது மோதல் பங்காளிகள் போராடுவதற்கு முடிவு!

கொழும்பு, ஒக்ரோபர் 26
பெரமுன தலைமையிலான ஆளும்கட்சிக் கூட்டணியிலுள்ள பங்காளிக் கட்சிகளிடையேயான விரிசல் மோதலாகி வெடித்துள்ளது. அரசின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள அரசின் பங்காளிக்கட்சிகள், அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் சந்திப்புக்களை நடத்தத் தீர்மானித்துள்ளன. இதன்படி 'மக்கள் சபை' எனும் தொனிப்பொருளில் கூட்டங்களை நடத்துவதற்கும், முதலாவது கூட்டத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 15

## எழுமாற்று சோதனையில் 79 பேருக்குக் கொரோனா

கொழும்பு, ஒக். 26
குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய நகரில் எழுமாறாக நடத்தப்பட்ட கொரோனாப் பரிசோதனையில் 79 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது, 15

## புதிய முறைமையில் போராட்டம் தொடரும்

ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26
அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் அதேவேளை, புதிய முறைமையில் இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம். சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்." என்று, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக 15

## இந்தியச் செல்வந்தர் அதானி மன்னாருக்கு திடீர் விஜயம்

எண்ணெய்வளம் பற்றி ஆராய வந்தாரா? எனச் சந்தேகம்



மன்னார், ஒக். 26
இந்தியாவின் கோடீஸ்வரரான அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி இலங்கைக்குப் 15

## அரசிலிருந்து வெளியேறத்தயார் அதன் பின்னர் எங்கே போவது?

குழம்பிப்போயுள்ள சு.க. அணி

கொழும்பு, ஒக். 26
"கட்சி தீர்மானிக்கும்பட்சத்தில் பதவிகளைத் துறந்துவிட்டு அரசிலிருந்து வெளியேறுவதற்கு நாம் தயார். ஆனால், அரசிலிருந்து வெளியேறிய பிறகு நாம் எங்கு செல்வது? சஜித்துக்கு பின்னால் சென்று, கைப்பாவையான அவரை ஜனா 15

## வர்த்தகர் மீது வாள்வெட்டு

கிளிநொச்சி, ஒக். 26
கிளிநொச்சியில் தனது வியாபார நிலையத்தைப் பூட்டிவிட்டு வீடு சென்றவர் வாள்வெட்டுக்குழுவின 15

## வாளுடன் பயணித்த 3 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26
வாள்வெட்டு நடத்தும் நோக்கில் வாள்களுடன் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மூவரை, வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த தெல்லிப்பழை 14

## சூடான் பிரதமர் கைது அவசரநிலை அறிவிப்பு

சூடான், ஒக். 26
சூடான் நாட்டின் இடைக்காலப் பிரதமர் அப்துல்லா ஹாம்டாக் கைது செய்யப்பட்டுள்ளார். அதனையடுத்து அங்கு அவசர நிலையை அறிவித்துள்ளார் இராணுவத் தளபதி அப்தெல் பதாத் அல் புர்ஹான்.



ஆபிரிக்கக் கண்டத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது சூடான். பரப்பளவு அடிப்படையில் ஆபிரிக்க் கண்டத்தில் இது மிகப்பெரிய நாடு. வடக்கில் எகிப்தும், கிழக்கில் எரித்திரியாவும் 13

## நீக்கப்பட்டது இரவுத் தடை

கொழும்பு, ஒக். 26
கொரோனாத் தொற்றுப் பரவலின் காரணமாக இரவு 11 மணியிலிருந்து அதிகாலை 4 மணிவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பிரயாணத்தடை நேற்று நள்ளிரவு தொடக்கம் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரயாணத்தடை நீக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகள் அமுலில் உள்ளன என்றும் - தொற்று நிலைமையை முற்றாக கட்டுப்படுத்துவதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)





# மணல் அகழ்வை உடன் நிறுத்துக!

## குடாரப்பு மக்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஒக். 26**

**மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாரப்புப் பகுதியில் நேற்று முன்தினம் அந்தப் பகுதி மக்களால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில்: நாகர்கோவில் தெற்கு, குடாரப்புக் கிராமத்தில் விவசாய நிலங்கள், தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. மருதங்கேணி பிரதேச செயலகத்தால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டும் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இவை அரச காணிகள் அல்ல. தனியாருக்குச் சொந்தமான தோட்டக்காணிகளாகும். வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளும் உள்ளன. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது மருதங்கேணி பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை வழங்கியுள்ளார். இதற்கு அரசியல்வாதிகள் சிலரும் உடந்தையாக உள்ளனர்.

அனுமதிப்பத்திரத்துடன் உழவியந்திரங்களில் களிமண் அகழ்வு இடம்பெற்றபோது, மக்களின் எதிர்ப்பால் களிமண் அகழ்வு நிறுத்தப்பட்டது. களிமண் அகழ்வால் குழிகள் ஏற்பட்டு வெள்ளம் தேக்கமடைகின்றது. மழை காலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட முடியவில்லை. அத்துடன் உவர் நீர் விவசாய நிலங்களுக்குள் உட்புகுந்து வயல் நிலங்கள் உவராகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே எமது விவசாய நிலங்களையும், மேய்ச்சல் தரைகளையும் பாதுகாக்க மண் அகழ்வு நிறுத்தப்பட வேண்டும் - என்றனர். (ம-4-20)

வவுனியாவிலிருந்து

# வெளி மாகாணங்களுக்கு பஸ் சேவைகள் ஆரம்பம்



வவுனியா, ஒக். 26

வவுனியா மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து, வெளிமாகாணங்களுக்கிடையிலான பஸ் சேவைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. வவுனியா மத்திய பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து கொழும்பு, கண்டி, அக்கரைப்பற்று, திருகோணமலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கே பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-4-18)



# வவுனியா நகரில் விபத்து இளைஞன் படுகாயம்

வவுனியா,ஒக்.26

இராணுவ பிக்கப் வாகனமும் மோட்டர் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து வவுனியா நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் இருந்து புகையிரத வீதி நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்று சென்றுகொண்டிருந்தது, மக்கள் வங்கி முன்பாக நின்ற இராணுவ பிக்கப் ரக வாகனம் வீதியில் திடீரென திரும்ப முற்பட்டவேளை மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-18)



# துப்புரவுப் பணிகள்

தெல்லிப்பழை,ஒக்.26

தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து தெல்லிப்பழை மருத்துவமனை வரை உள்ள வீதியின் இருமருங்கிலும் துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. பொலிஸார், வலி. வடக்கு பிரதேச சபையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்டலில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் ஹொட்டகச்சி, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விஜயவர்த்தன ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். (ஐ-125)

# மாலை வேளையில் மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, ஒக். 26

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தெற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் மூடுபனி நிலவும். இடியுடன்கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ம-4)

# அசாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் விதமாக, ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில், அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் குணரத்ன தலைமையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி முதல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ம-4)

# மயான அபிவிருத்தியில் குழப்பம் பிரதேசசபை உறுப்பினர் விசனம்

கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி பெரிய பரந்தன் வட்டாரத்தில் மயான அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், அதற்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் இ. இளங்கோ குற்றஞ்சாட்டியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்: இதற்கான நிதி 2020ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டு, உருத்திரபுரம் சனசமூக நிலையம் ஊடாக வேலைகளுக்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டது. பின்பு உருத்திரபுரம் சனசமூக நிலைய மயான வேலையை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று பிரதேசசபைக்கு தெரிவித்திருந்தது. அதனால் உமையாள்புரம் சனசமூக நிலையம் ஊடாக மயான வேலைகளை முன்னெடுப்பதற்கு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

உமையாள்புரம் சனசமூக நிலையம் பரந்தன் வட்டாரத்துக்குள் அடங்குவதன் காரணமாக, பரந்தன் வட்டாரத்தின் காஞ்சிபுரம் பகுதியில் மயான அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இறுதியாக நடைபெற்ற சபை அமர்வில் பெரியபரந்தன் மயான அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை வேலைகள் தொடங்கப்படவில்லை. இது தொடர்பாக தவிசாளர் பதில் அளிக்கவேண்டும் என்று நான் கோரியிருந்தேன். ஆனால், சரியான பதில் வழங்கப்படவில்லை. எனவே இதுதொடர்பாக தவிசாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது வட்டாரத்துக்குரிய மயான வேலைக்கென ஒதுக்கப்பட்ட நிதி, வேறு வட்டாரத்துக்கு மாற்றப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ம-4-13)

### ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் ஆரம்பம்

# பூச்செண்டுகள் வழங்கி மாணவர்கள் வரவேற்பு





**யாழ்ப்பாணம், ஒக். 26**

**நாடு முழுவதுமுள்ள அனைத்து ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.**

200க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக்கொண்ட பாடசாலைகள் முதற்கட்டமாக கடந்த 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் கட்டத்தின்கீழ் 200க்கும் அதிகமான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட அனைத்து ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பூங்கொத்து வழங்கி வரவேற்றனர்.

வவுனியா மாவட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களின் வரவு முழுமையானதாக இருந்தது. எனினும் மாணவர்களின் வரவு சற்றுக் குறைவாக இருந்தது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்கள், பெற்றோருடன் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர் அதிக எண்ணிக்கையான மாணவர்களை பாடசாலைச் சீருடையுடன் காண முடிந்தது. பாடசாலை நுழைவாயிலில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மாணவர்களின் உடல்வெப்பம் அளவீடு செய்யப்பட்டது. ஏனைய சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன. வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் பாடசாலைகளுக்கு முன் விசேட கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வடக்கு வலயத்தில் 35 பாடசாலைகளிலும், தெற்கு வலயத்தின் 63 பாடசாலைகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்தனர். பெற்றோர் ஆர்வத்துடன் பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து சென்றமையைக் காணக்கூடியதாக இருந்தது. (ம-4-18-56-110-214)

# மாணவர்களின் கைவசம் மேலதிகமான முகக்கவசம்!

*மருத்துவ நிபுணர் ஆலோசனை*

கொழும்பு, ஒக். 26



பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு பெற்றோர் தயங்கத் தேவையில்லை. அவர்கள் எப்போதும் மேலதிகமாக இன்னொரு முகக்கவசத்தைக் கைவசம் வைத்திருப்பதை பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும் - என்று சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் பெரும்பாலானோருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதனால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பயப்படத்தேவையில்லை. ஆயினும் பிள்ளைகளுக்குக் கொரோனா வைரஸ், டெங்குக் காய்ச்சல் தொடர்பில் உள்ள ஆபத்து இன்னும் குறையவில்லை.

பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு மேலதிகமாக முகக்கவசம் ஒன்றை பெற்றோர் வழங்க வேண்டும். கைகளைக் கழுவுவதற்கான சனிடைசர்களையும் முடிந்தால் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் உணவுகளை உட்கொள்வதற்கு பிள்ளைகளைப் பழக்க வேண்டாம். வீட்டில் சமைத்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் - என்றார். (ம-4)



# பாடசாலை மாணவருக்கு வவுனியாவில் தடுப்பூசி

வவுனியா, ஒக். 26

வவுனியா மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. அங்கு மாணவர்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி பெற்று வருதை அவதானிக்க முடிந்தது. (ம-4-18)

# ஐயப்ப ஆலய குடமுழுக்கு

பண்டத்தரிப்பு, ஒக். 26

பண்டத்தரிப்பு, பனிப்புலம் கலட்டி ஹரிஹரசுதன் ஐயப்பன் ஆலயத்தின் குடமுழுக்கு நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 10.30 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய 'சிவாகம சாதகபூஷணம்' சிவஸ்ரீ பேரின்ப. இன்பராஜக் குருக்கள் தலைமையில் குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு மற்றும் பால்காப்பு சாத்த முடியும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)




**அன்னை எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும் எண்டு எங்கட பழைய ஆக்கள் ஒண்டும் சும்மா சொல்லேல்ல. இந்த கலிகாலத்தில நடக்கிறதுகளை அப்பவே முன்கூட்டியே கணிச்சுத்தான் சொல்லியிருக்கினம் போல.**

**யாழ்ப்பாணத்து பிரதேசசபை ஒண்டின்ர தவிசாளர் ஒருத்தர் கிட்டடியில உடம்பு ஏலாம ஹொஸ்பிட்டலில இருந்தவர். அந்தாள் அங்க சேடமிழுத்துக் கொண்டிருக்கேக்கையே இங்க, அடுத்த தவிசாளர் ஆரெண்ட பிடுங்குப்பாடு தொடங்கிட்டாம். ஒற்றுமையின்ர பெயரால சனத்திட்ட 'கூட்டாப்' போய் வாக்குக்கேட்கிற கட்சிக்கதான் இந்தப் பிடுங்குப்பாடு வந்திருக்கும் எண்டு நீங்கள் டப்பெண்டு பிடிச்சிடுவியள். அதில 'பட்சிக்கு' சந்தேகமில்லை.**

**ஒற்றுமை எண்டு கதைவிடுற அந்த கூட்டுக்குள்ள 3 கட்சி இருக்குத்தானே. அதில ஒருகட்சியைச் சேர்ந்தவர்தான் ஹொஸ்பிட்டலில இருந்த தவிசாளர். மற்ற கட்சியாள் உப தவிசாளர். தவிசாளர் இப்ப செத்திட்டார். அந்தாள் சாக முதலே இது நடந்தாலும், பட்சி இப்பதான் உங்களுக்குச் சொல்லுது. அவரின்ர கட்சியைச் சேர்ந்த ஆள்தான் அடுத்த தவிசாளரா வாறதா இல்லாட்டி இப்ப உப தவிசாளரா இருக்கிறவரை புதுத் தவிசாளராக்கிறதா எண்டு ஒரு குழப்பம்.**

**இதில, தவிசாளர் இருந்த கட்சிக்காரர், தங்கட கட்சியிலஇருந்து, அடுத்தாள் தவிசாளரா வாறதை விரும்பேல்லையாம். போன பார்லிமென்ட் எலக்சனோட வெளிநாட்டு இறக்குமதியில வந்து முதலமைச்சர் கனவில இருக்கிற பங்காளிக் கட்சியின்ர முக்கியமான புள்ளி தான் அடுத்த தவிசாளரைத் தெரிவு செய்யிறதில மும்முரமா இருக்கிறாராம். அடுத்ததா தவிசாளரா வாறதுக்கு விரும்பிறவர் போன எலெக்சனில மாற்றுக் கட்சி ஒண்டுக்கு வேலை செய்தவர் எண்டு பங்காளிக் கட்சியின்ர அந்த முக்கியமான புள்ளி சொல்லியிருக்கு. அதில உண்மையும் இருக்கு எண்டு சொல்லப்படுது. இதால தங்கட கட்சிக்கு இல்லாட்டிலும் பரவாயில்லை மற்ற கட்சியைச் சேர்ந்த உப தவிசாளரை, தவிசாளராக்கலாம் எண்டு அந்தப் புள்ளி சொல்லியிருக்கு. இது இப்ப அங்க பிடுங்குப்பாடாய் போய்க் கொண்டிருக்கு.**

**இப்பிடி பிடுங்குப்பாடு வந்ததால ஒற்றுமையைக் காட்டி ஆட்சியைப் பிடிச்ச 4 சபையை யாழ்ப்பாணத்தில மாத்திரம் பறிகொடுத்தாச்சு. உங்கையும் பறிகொடுக்காம இருந்தாச்சரி. ஏற்கனவே இவையின்ர பிடுங்குப்பாட்டால அந்தச் சபையில இருக்கிற மீன் குரூப்பைச் சேர்ந்த 3 பேர் எதிர்ப்பக்கம் சப்போர்ட் பண்ண வெளிக்கிடுகினமாம். அப்ப இதுவும் கையை விட்டுப் போகப் போகுதோ...?**




- பட்சி

நுவரெலியாவிலும்

## உரத்தை வழங்கக்கோரி விவசாயிகள் போராட்டம்

நுவரெலியா, ஒக். 26
விவசாயத்துக்குத் தேவையான உரத்தை வழங்குமாறு வலியுறுத்தி கொத்மலை பகுதி விவசாயிகள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போராட்டத்தில், உரம் வழங்கப்படாததால் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தை கைவிட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் சுட்டிக்காட்டினர். அரசு தனது பிடிவாதப் போக்கைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி, விவசாயிகள் உரத்துக்காக சிதறுதேங்காய் உடைத்து இறைவனிடம் வேண்டுதல் செய்தனர். (ம-4)





## இரசாயன உரம் கோரி மன்னாரில் கவனவீர்ப்பு

மன்னார், ஒக். 26
**இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகளை உடனடியாக இறக்குமதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மன்னார் விவசாயிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமக்குத் தேவையான இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளை உடனடியாக இறக்குமதி செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

உயிலங்குளம் அடம்பன் வீதியில் ஆரம்பித்த போராட்டம், உயிலங்குளம் கமநல கேந்திர நிலையத்தில் நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மனு, மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான்



பிரதேசசபை தவிசாளர் தி. பரஞ்சோதி, உப தவிசாளர் லூர்துநாயகம் புவனம் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், விவசாய அமைப்பின் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-4-213-56)

## நிர்வாகத் தெரிவு

கொடிகாமம், ஒக். 26
மட்டுவில் வடக்கு அபிவிருத்திக் கழகத்தின் நிர்வாக சபைத் தெரிவு நேற்றுமுன்தினம் கண்ணகை சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

தலைவராக தெ.திருவேரகன், உபதலைவராக த. நிமலராஜ், செயலாளராக செ.துஷாந்தன், உபசெயலாளர் ப.விஷ்ணுகாந்,பொருளாளராக நா.கஜேந்திரன், கணக்காய்வாளர் வி.சிவபாலன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக த.அகிலன், தி.கோபிநாத், கி.டிலக்சன், சி.டினேஸ், த.சுரேஷ், ப.பிரதீபன், இ.சுதர்சன், சி.மயூரன், சி.மதுசன் ஆகியோரும், கழக போசகர்களாக கா.சிவஞானசுந்தரம், க.சண்முகசுந்தரம், சு.சிவசோதி, ம.விக்னேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்குளம் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 36 வயதுடைய நபரொருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. (ம-27)

## அபிவிருத்திகளை துரிதப்படுத்துமாறு முதல்வர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26
'ஐ றோட்' திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டுவரும் 17 வீதிகளின் சீரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திட்ட அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பின் திட்டப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், மாநகர சபை பொறியியலாளர், வீதி சீரமைப்பு மற்றும் நீர் வழங்கல் பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்த நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்படி பிறவுண் வீதியை நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னரும், ஏனைய வீதிகளை நவம்பர் மாத இறுதிக்குள்ளும் நிறைவுறுத்தித் தருவதாக ஒப்பந்தகாரர்களால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. (ஐ-20)

## வடக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26
வடக்கில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில் மாகாண சுற்றுலாப் பணியகத்தால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


அதனடிப்படையில் பருத்தித்துறை, தும்பளை கடற்கரை பகுதியில் சுற்றுலாவிகள் அமரக்கூடிய கல்லாசனங்கள் மற்றும் சோலர் கருவிகள் உடனான மின்னொளிகள் ஆகியன 0.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் சங்குப்பிட்டி பகுதியில் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நடைபாதை அமைக்கப்படவுள்ளதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக குப்பைத் தொட்டிகளும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தில் சுற்றுலாத்துறை சார் பயிற்றுநர்களை முன்னெடுப்பதற்காக 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பயிற்சி நெறிக்கான மேல்தள கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் நேர்முகத் தேர்வுகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 20 பயிற்சியாளர்களுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவ பயிற்சிநெறி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


பயிற்சிகளை நிறைவு செய்த பின்னர், அவர்களுக்குரிய வேலை வாய்ப்புகளும் வழங்கப்படவுள்ளன. (ஐ-125)

## 'மல்லிகை மொழி கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா



யாழ்ப்பாணம், ஒக். 26
பாவலர் செல்வி ஆர்த்திகா சுவேந்திரனின் 'மல்லிகை மொழி கவிதைகள்' நூல் வெளியீட்டு விழா கடந்த 22ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



## பொதுநலச் செயற்பாடுகள்

சுவிற்சர்லாந்தில் வசிக்கும் திருமதி தயாநிதி செந்தில்நாதனின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரின் நிதியுதவியில் பொதுநலச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சூழலியல் மேம்பாடு அமைவனம் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் சிலருக்கு பகல் உணவும், உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இதேவேளை புங்குடுதீவு பத்தாம் வட்டாரம், கோடைக்காடு வீதியும், அதனோடு இணைந்து காணப்படுகின்ற ஒழுங்கையும் சூழகம் அமைப்பின் உறுப்பினர்களால் துப்புரவு செய்யப்பட்டன. (ஐ)




சுழிபுரம் கிழக்கு, சாத்தாவோலை பனிப்புலம் சபரிபீட ஐயப்பன் ஆலய குடமுழுக்கு நேற்றுமுன்தினம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. (ஐ)

# அதிபர், ஆசிரியர்கள் நேற்றும் போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக். 26

அதிபர், ஆசிரியர்கள் ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, வடக்கு உட்பட நாடு முழுவதும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கொழும்பு கோட்டையில் முன்னெடுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய மாகாணங்களில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு முன்பாக நேற்று மதியம் ஒன்றுகூடிய அதிபர், ஆசிரியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர். சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணப்பட வேண்டும், இலவசக்கல்வியை பறிக்காதே, கல்விக்காக ஆறு வீத ஒதுக்கீடு வேண்டும், இலவசக்கல்வி பாதுகாக்கப்பட வேண்டும், கல்வி இராணுவமயப்படுத்துவதை நீக்கவேண்டும் உட்பட பல கோஷங்களை அவர்கள் எழுப்பினர். சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கி இருந்தனர்.

மாணவர்களின் நலனுக்காக, பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளை கைவிட்டு பல்வேறு புதிய வழிமுறைகளை கையாண்டு போராட்டம் தொடரும் என்று அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க முன்னணி நேற்று முன்தினம் எச்சரித்த நிலையில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, பளை கல்விக் கோட்ட அலுவலகம் முன்பாகவும் ஆசிரியர்கள் நேற்று மதியம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (கு-25,6)

# திருக்குறள் வளாகத்துக்கு மாவிட்டபுரத்தில் அடிக்கல்



மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, வரலாற்றுச் சிறப்புமிக்க மாவைக் கந்தன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள காணியில் நேற்று நடைபெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி கோவில் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டு அருளாசி வழங்கினார்.

நிகழ்வில், மாவை ஆதீன ஹர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள், மாவை ஆதீன இளவரசு ஷ.இ.ஞானஸ்கந்த சர்மா, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க.செந்தில்ராஜக் குருக்கள், கோப்பாய் சுப்பிரமணிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.


நிகழ்வின் இறுதியில் சிவபூமி திருக்குறள் வளாக கட்டடப் பணிகளுக்குப் பொறுப்பான நல்லூரைச் சேர்ந்த இளம் கட்டடக் கலைஞர் கணேசபிள்ளை சாரங்கன் சிவபூமி அறக்கட்டளை சார்பில் ரிஷி தொண்டுநாத சுவாமிகளால் கௌரவிக்கப்பட்டார்.

யாழ்.மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருபவருமான மருத்துவ நிபுணர் கமலாகரன் சிவபூமி அறக்கட்டளைக்கு அன்பளிப்பாக வழங்கி வைத்த ஆறரைப் பரப்புக் காணியில் திருக்குறள் வளாக நிர்மாணத்துக்கான அடிக்கல் நடுகை நடைபெற்றது.

அவரது குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் இடம்பெறவுள்ள திருக்குறள் வளாக கட்டட நிர்மாணப் பணிகளும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (கு)

# நங்கூரங்கள் திருட்டு மாதகலில் முறியடிப்பு

## வாகனத்தைவிட்டு நால்வர் தப்பியோட்டம்




யாழ்ப்பாணம், ஒக். 26

மாதகல் மேற்கு கடற்கரைப் பகுதியில் நேற்றிரவு நங்கூரங்களை திருடமுற்பட்ட வேளை அது முறியடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. திருட வந்திருந்த நால்வரும் வாகனத்தை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

அங்கு வீதியில் பட்டாரக வாகனம் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சத்தம் எழுந்துள்ளது. அந்த வாகனத்தை நோக்கி மீனவர்கள் சென்றவேளை நால்வர் தப்பியோடியுள்ளனர். இந்தநிலையில் பட்டா ரக வாகனத்தை மீனவர்கள் சோதனை செய்தபொழுது அதில் மீனவர்களின் படகிலிருந்து அறுத்து கொண்டுவரப்பட்டிருந்த நங்கூரங்கள் இருந்தன. இதனையடுத்து மாதகலில் உள்ள மீனவர்கள் இணைந்து குறித்த நால்வரையும் கடற்கரை பற்றைகாடுகளில் தேடிய வேளை படகுகளில் இருந்து அறுத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 3 நங்கூரங்களை மீட்டனர்.

இதனையடுத்து இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலை பொலிஸார் குறித்த வாகனத்தையும் திருடப்பட்ட பொருள்களையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-125)

# போதை மாத்திரை, 2 கிலோ கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், ஒக். 26

சங்கானை அராலி வீதிப்பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 2கிலோ கஞ்சா மற்றும் உடலுறவுப்போதை மாத்திரைகள் நிறுவைக்கு பயன்படும் தராசு என்பன நேற்று மதியம் கைப்பற்றப்பட்டுள்ளன. இராணுவப்புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது இவை கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும், சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட பொருள்கள் சித்தங்கேணி மதுவரித்திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கு-10,27 319)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். கருத்துவேறுபாடுகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுப நிகழ்ச்சிக்கான பேச்சு சாதக மாக முடியும். நீண்டநாள்களாக எதிர் பார்த்த பணம் இன்று கிடைக்கும். ஏற் பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.


**மகரம்:** கருத்துவேறுபாடு நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# திரவ உர இறக்குமதியில் பெருந்தொகை முறைகேடு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக். 26**

**திரவ உர இறக்குமதியில் அரசால் உர மாபியாவொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இரசாயன உர இறக்குமதியை இடைநிறுத்துவதாகக்கூறி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அமுலில் உள்ளபோது, இந்தியாவிலிருந்து திரவ நனோ நைட்ரஜன் உரம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றது - இது எவ்வாறு சாத்தியமானது? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கேள்வி எழுப்பியுள்ளார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் பெருமளவு அதிகரித்திருப்பதுடன் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. உரத்துக்குத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை உற்பத்திகள் வெகுவாக வீழ்ச்சி கண்டுள்ளன. எமது நாடு ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சியின் கீழிருந்தபோது 'வெல்லஸ்ஸ கலவரத்தின்' ஊடாக நாட்டின் பயிர்ச்செய்கை முழுமையாக அழிக்கப்பட்டதையொத்த நடவடிக்கை தற்போது ராஜபக்ச அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சேதன உரத்தின் பயன்பாட்டுக்கு முழுமையாக நிலைமாற்றமடைவதாகக்கூறி மக்களை ஏமாற்றியிருக்கும் அரசும், அதனூடாக நாட்டில் 'உர மாபியாவை' தோற்றுவித்திருக்கின்றது. அதன் விளைவாக தீங்கேற்படுத்தக்கூடிய நுண்ணுயிரிகள் அடங்கிய உரம் நாட்டுக்குக் கொண்டுவரப்படுகின்றது.

அதேபோன்று இரசாயன உர இறக்குமதியை இடைநிறுத்துவதாகக்கூறி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் நடைமுறையில் இருக்கும்போது, இந்தியாவிலிருந்து திரவ நனோ நைட்ரஜன் உரம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றது. எனவே வர்த்தமானி அறிவித்தல் நடைமுறையில் உள்ளபோது எவ்வாறு நாட்டுக்குள் இரசாயன உரம் கொண்டுவரப்பட்டது? அது மாத்திரமன்றி நனோ நைட்ரஜன் உரம் என்பது வழமையான விளைச்சலை மேலும் மேம்படுத்துவதற்காக ஓர் 'ஊக்கியாகப்' பயன்படுத்தப்படுகின்ற உரமாகும். அதன்படி பயிர்களுக்கு வழமையாகப் பயன்படுத்தப்படுகின்ற உரத்துடன் மேலதிகமாக நனோ நைட்ரஜன் உரத்தையும் பயன்படுத்துவதை விடுத்து, நனோ நைட்ரஜன் உரத்தை மாத்திரம் பயன்படுத்துவதற்கு இந்த அரசும் திட்டமிட்டுள்ளது. இதனால் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை - என்றார். (ம)

# 6 இந்தியக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஒக். 26

இந்தியாவின் முதல் பயிற்சிப் படையணியின் 6 இந்தியக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளன.

ஐ.என்.எஸ்.மகர் மற்றும் ஷர்துல் ஆகிய கப்பல்கள் கொழும்புக்கும், ஐ.என்.எஸ். சுஜாதா, தரங்கனி, சுதர்ஷினி மற்றும் சி.ஜி.எஸ். விக்ரம் ஆகிய கப்பல்களே திருகோணமலைக்கும் வருகை தந்துள்ளன. இளம் உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி அதிகாரிகளின் வினைத்திறனை மேலும் விரிவாக்கும் இலக்குடன், குறித்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளன என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-4)

# ராஜபக்சக்களினது ஆட்சி நிலைக்காது!

## ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 26

தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக, அவர்களது உருவப்பொம்மைகளை எரிக்கும் மக்கள், அவர்களை வீதியில் இறங்க முடியாத அளவுக்கு விரட்டியடிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை. இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ச குடும்பத்தினர் ஒவ்வொருத்தராக கையில் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு, நாட்டைவிட்டுத் தப்பியோடிவிடுவர். பண்டோரா அக்காவும், அவரது கணவரும் சேர்ந்து 160 மில்லியன் டொலரை மோசடியாகச் சம்பாதித்துள்ளனர். அந்தப் பணத்தை எடுத்தால் உரப்பிரச்சினை, ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை, அரிசிப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். இவர்களின் வீடு, பிள்ளைகள் உள்ளிட்டவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். பணம் சம்பாதிக்கவே ஒவ்வாரு காலத்துக்கும் ராஜபக்ச குடும்பத்தினர் இலங்கைக்கு வருகின்றனர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இவர்களுக்கும் இங்கிருந்து வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்களுக்கும் சிறு வித்தியாசமே உள்ளது. வீட்டுப் பணிப்பெண்கள், தாம் சம்பாதிக்கும் பணத்தை இலங்கைக்கு அனுப்புகின்றனர். ஆனால், ராஜபக்ச குடும்பத்தினர் இங்கிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டு செல்கின்றனர். இன்று என்ன பேசுகிறாம். நாளை என்ன பேசுகிறோம் என்றுகூட இந்த ராஜபக்ச குடும்பத்துக்குத் தெரியாமல் போய்விட்டது -என்றார். (ம-4)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பாதுகாப்பை ஏற்படுத்துக

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



கொழும்பு, ஒக். 26

சிறையிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்;

ரஞ்சன் ராமநாயக்க கொள்ளை அடித்துவிட்டோ, ஊழல், மோசடியில் ஈடுபட்டோ, சமூக விரோதச் செயலை முன்னெடுத்தோ சிறைத்தண்டனையை எதிர்கொள்ளவில்லை. மாறாக அரசியல் விடயங்களுக்காகவே தண்டனையை அனுபவிக்கின்றார். நீதிமன்றத் தீர்ப்பை நாம் விமர்சிக்கவில்லை.

ரஞ்சன் ராமநாயக்க ஊழல், மோசடிகளுக்கு எதிராகப் போராடியவர். தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று அவரே கூறியுள்ளார். அதேபோன்று கடந்த காலங்களில் சிறைச்சாலைக்குள்ளேயே கைதிகள் கொல்லப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு நடந்துள்ளன. எனவே, ரஞ்சனுக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும். அவரின் உயிர்ப் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அரசு வழங்க வேண்டும்.

ரஞ்சன் மக்களால் விரும்பப்பட்ட ஒருவர். எனவே, அவருக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும். ஏற்கனவே இந்தக் கோரிக்கையை விடுத்தோம். மீண்டும் ஒருமுறை முன்வைக்கின்றோம். ஜனாதிபதி இதனைச் செய்தால் மக்கள் எதிர்க்கமாட்டார்கள். மாறாக ஜனாதிபதிக்கான புகழ் அதிகரிக்கும் -என்றார். (ம-4-44)

# ஒரே தடவையில் இரு தேர்தல்கள்

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, ஒக். 26

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 4 வருடங்களுக்கு ஒரு முறை ஒரே தடவையில் நடத்தப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய பிரேரணையை முன்வைத்துள்ளது.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையிலான விசேட குழுக் கூட்டத்தில், ஜாதிக ஹெல உறுமய குறித்த பிரேரணையை முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர் பட்டியலில் நூற்றுக்கு 25 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் போது, அது மூன்றில் ஒரு பங்காக உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், ஒக். 26

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் ஐயன் கோவில் முன்றிலில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச மட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில், கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தலைவராக சு.குமரகுரு, செயலாளராக வை.ஜெகதாஸ் மற்றும் பொருளாளராக ச.முகுந்தன் ஆகியோருடன் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முற்றுப்புள்ளி இன்னும் இல்லை!

கொரோனாப் பேரலையின் பின்னர் நாடு மெல்ல மெல்ல இயல்புக்குத் திரும்புகின்றது. நாட்டில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக ஆரம்பப் பிரிவுச் சிறார்கள் பாடசாலைகளுக்குச் செல்ல ஆரம்பித்திருக்கின்றனர். கொரோனாப் பெருந்தொற்றால் நொடிந்திருக்கும் மனங்களுக்கு இது உற்சாகமளிக்கும்.

இலங்கை போன்ற தீவில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது, ஏனைய நாடுகளை விடவும் இலகுவானது என்றபோதும், தொற்றின் ஆரம்பத்தில் அரசு காட்டிய அசமந்தம் இலங்கையில் கொரோனா அலைகளுக்குக் காரணமானது. அதன்பின்னர் ஏற்பட்ட கொரோனா அலைகளும் அரசினதும், மக்களினதும் செயற்பாடுகளாலேயே வீரியமாயின.


இப்போது நாட்டில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அரசு கூறிக்கொண்டிருந்தாலும், ஏறத்தாழ நாட்டின் அனைத்துப் பகுதிகளும் வழமைக்குத் திரும்பிவிட்டன. நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும், நாளாந்த கொரோனா இறப்புக்களிலும் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. மறுபுறத்தில் வெளிநாட்டுச் சுற்றுலாவிகள் நாட்டுக்குள் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளனர். துறைமுகப் பணிகளும் வழமைக்குத் திரும்பிவிட்டன.

இவை அனைத்தும் நடப்பதால், கொரோனாத் தொற்றை முற்றுமுழுதாக ஒழித்துவிட்டோம் என்று மக்கள் நினைத்துவிடக்கூடாது. இலங்கை போன்ற நாடு தொடர் முடக்கத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது. பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள இலங்கை அரசு, அதைச் சமாளிப்பதற்காகவே அவசர அவசரமாக நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளது என்ற உண்மையை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

விமான நிலையங்கள், துறைமுகங்கள் திறந்து விடப்பட்டுள்ளதாலும், சுற்றுலாவிகளுக்குக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாலும் கொரோனா வைரஸின் புதிய திரிபுகள் நாட்டுக்குள் நுழைவதற்கான கதவுகள் அகலத் திறக்கப்பட்டுள்ளன என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இலங்கையில் அதிகமானவர்கள் இரு டோஸ் தடுப்பூசிகள் ஏற்றிக்கொண்டாலும்கூட, புதிய வைரஸ் திரிபுகள் ஊடுருவும் வாய்ப்பு இருக்கின்றது என்று வெளிநாட்டு துறைசார் நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். டிசெம்பர் மாதமளவில் புதிய வைரஸ் அலை தோன்றலாம் என்ற எச்சரிக்கை மணியும் அடிக்கப்பட்டுள்ளது.

இந்த அபாயங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளை ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் மக்கள் தங்களின் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மாகாண எல்லைகள் திறக்கப்பட்டாலும் தேவையற்ற பயணங்களைச் சிறிது காலத்துக்கு தவிர்த்துக்கொள்ளுங்கள். பொது இடங்களில் அடிப்படைச் சுகாதார அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுங்கள். உங்கள் வீடுகளில் இருப்போரை, சிறார்களை சுகாதார நடைமுறைகளைக் கைக்கொள்ள வழிப்படுத்துங்கள். இப்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் சிறுவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைச் சரியாகப் பின்பற்றுகின்றனரா என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

முன்னெச்சரிக்கையாக இருப்பதே கொரோனா அலைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழி. அதை உணர்ந்து ஒவ்வொருவரும் செயற்படுவதே இப்போதைய காலத்தின் தேவை.




# கொலைச் சந்தேகநபர்களை கைதுசெய்யத் தாமதம் ஏன்?

## நீதிவான் அதிருப்தி

**யாழ்ப்பாணம், ஒக். 26**

**சிறு சிறு குற்றவாளிகளை உடன் கைது செய்யும் பொலிஸார், கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதற்கு ஏன் காலம் தாமதிக்கின்றனர் என்று நீதிவான் பீற்றர் போல், யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியிடம் கேள்வி எழுப்பினார்.**

யாழ்ப்பாணம் குருநகரில் இளைஞர் ஒருவர் நடுவீதியில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டார். இதனுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களில் 8 பேர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். முக்கியமான சந்தேகநபர்கள் உட்பட 6 பேர் சட்டத்தரணி ரெமிடியஸ் ஊடாக சரணடைந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்த நேற்று முன்தினம் தவணை இடப்பட்டிருந்தது.

முக்கிய சாட்சிகள் கொலைச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ள நிலையில், நீதி மன்றுக்கு சமுகமளிக்க முடியாதுள்ளனர் என்று சாட்சிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மோகனதாஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் முக்கியமான சந்தேகநபர்கள் இன்னமும் கைது செய்யப்படாத நிலையில், இது குறித்து குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியை மன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதற்குப் பதிலளித்த பொறுப்பதிகாரி, சந்தேகநபர்கள் யாழ். மாவட்டத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். வெளி மாவட்டங்களில் பதுங்கி யுள்ளனர். விரைவில் கைதுசெய்வோம் - என்றார். சிறுசிறு குற்றங்களில் ஈடு படுபவர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று கைது செய்யும் உங்களால், கொலைச் சந்தேகநபர்களை ஏன் இன்னமும் கைது செய்ய முடியவில்லை? புலனாய்வு உத்தியோகத்தர்களின் உதவியுடன் தகவல்களை ஏன் திரட்ட முடியவில்லை? வெளிமாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு தகவல்கள் அனுப்பி சந்தேக நபர்களை அடையாளம் காண ஏன் முயற்சிக்கவில்லை? என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.


எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன் சந்தேக நபர்களை கைதுசெய்து மன்றில் முற்படுத்தும்படி உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-4-20)

# வெடிமருந்து மற்றும் கசிப்புடன் முல்லைத்தீவில் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் சட்டவிரோத வெடிமருந்து மற்றும் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட முல்லைத்தீவு பொலிஸார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நின்ற நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்தனர். இதன்போது அவரிடம் இருந்து சட்டவிரோத வெடிமருந்து மற்றும் விற்பனைக்காக கொண்டுசெல்லப்பட்ட



ஆயிரத்து 500 லீற்றர் கசிப்பு என்பன மீடகப்பட்டன. சுதந்திரபுரம் உடையார்கட்டு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்றும், அவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### திருமதி ஷைலஜா காந்தரூபன்

உலகத் தமிழ் வரலாற்றில் முதன் முறையாக உலக கலைஞர்களை கௌரவிக்கும் Global Achievement Award 2021 Griffin College London கலை விருது வழங்கும் நிகழ்வில் சுதுமலையில் ஆசிரியர் பணியை ஆரம்பித்து. அதன்பின் இங்கிலாந்தில் 2008 தொடக்கம் 2021 வரை சங்கீத ஆசிரியராக பணியாற்றி வருகின்ற திருமதி ஷைலஜா காந்தரூபனின் சேவையையும், கலையை வளர்த்தமைக்கும் அவரின் தொடர் கடின உழைப்பையும் பாராட்டி இவருக்கு **"காந்தர்வ ரத்னா" விருது** 2021 Griffin College London ஆல் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர் மேன்மேலும் பல விருதுகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : நண்பர்கள்


# டெல்டா பிளஸ் வைரஸ் இலங்கையில் பரவலாம்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 26**



**கொரோனா வைரஸின் புதிய திரிபு வைரஸான டெல்டா பிளஸ், இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்று இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.**

புதிய வைரஸ் திரிபாக டெல்டா பிளஸ் வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது. இந்த வைரஸ் மனிதர்களுக்கு எந்தளவான பாதிப்புக்களை ஏற்படுத்தும், எவ்வாறு இந்த வைரஸ் பரவும் என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் இதுவரையில் எதனையும் கூறவில்லை. எனினும் கொரோனா வைரஸின் ஏனைய திரிபுகள் போன்று இந்த வைரஸும் நாட்டுக்குள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# ஆசனங்களுக்கு ஏற்பவே பஸ்ஸில் பயணிக்கலாம்

## போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26



மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச பணியாளர்களின் அத்தியாவசியப்போக்குவரத்தை இலகுவாக்குவதற்காக, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களை மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். அதற்கமைவாக சகல மாவட்டங்களிலும் குறைந்தது இரு பஸ்களை சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளோம். இதில் பயணிக்கும் அரச பணியாளர்களுக்கு அலுவலக அடையாள அட்டை கட்டாயமாக்கப்படும்.

மருத்துவப் பணிப்பாளர்களின் கடிதங்களைப் பயன்படுத்தி, மாகாணங்களுக்கு இடையில் பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. அந்த பஸ்களில் சுகாதார அலுவலகப் பணியாளர்களுக்கு மேலதிகமாக, அதிக பணத்தைச் செலுத்தி சாதாரண பயணிகளும் பயணிக்கின்றமை தெரியவந்துள்ளது.

எனவே, இந்த சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து, சுகாதார சேவை பணிப்பாளருக்கு அறிவித்துள்ளோம். இனிமேல் இலங்கைபோக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதி பெற்ற பஸ்கள் மாத்திரமே மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க முடியும் - என்றார். (ம-4)

# பைஸர் தடுப்பூசி வருகை தாராளம்

கொழும்பு, ஒக். 26

பாடசாலை மாணவர்களை இலக்காக வைத்து பைஸர் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்கு தொடர்ச்சியாக எடுத்து வரப்படுகின்றன. நேற்றும் 3 லட்சத்து 5 ஆயிரத்து 370 டோஸ்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

இதற்கு முன்னர் இலங்கைக்கு அதிகளவு சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றன. நாட்டின் சனத்தொகையில் தகுதியுடைய 80 வீதமானோருக்கு சினோபார்ம் தடுப்பூசியே செலுத்தப்பட்டது. தற்போது பாடசாலை மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதால், குறித்த தடுப்பூசிகளே தொடர்ச்சியாக நாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன. (ம-4)

# வழிபாடுகளில் பங்கேற்க 50 பேருக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 26

மத வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் விசேட வழிபாடுகளில் பங்கேற்பதற்கு, 50 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்ற தினத்துக்கு மாத்திரமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர், விதிக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்படுகின்றன. எனினும் மக்கள் கொரோனாத் தொற்று மீண்டும் பரவாதிருக்கும் வகையில் செயற்படுவது அவசியம்.

திறந்த வெளிகளில் குளிரூட்டப்பட்ட அறைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் 75 பேர் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், சில ஹொட்டல்களில் இரவு நேரங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நாட்டில் தொடர்ந்தும் நாளொன்றில் சுமார் 500 கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். எனவே கொரோனாத் தொற்று அபாயம் நாட்டில் தொடர்ந்தும் நீடிப்பதால், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய மக்கள் செயற்பட வேண்டும் - என்றார். (ம-4)

# ராஜா கொல்லுரேயின் கருத்தில் தவறில்லை

## பெரமுன ஆதரவு

கொழும்பு, ஒக். 26

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ராஜா கொல்லுரே வெளியிட்ட கருத்தில் தவறேதும் கிடையாது. அவரின் கூற்றை பெற்றோரும் அனுமதிப்பர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ராஜா கொல்லுரே நீக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி ஜனநாயகக் கட்சியென்பதால் எம்முடன் இணைந்து செயற்படும் கட்சிகளால் எடுக்கப்படும் தீர்மானங்களில் நாம் தலையிடுவதில்லை. அவற்றை விமர்சிப்பதும் கிடையாது.

எமது நாட்டின் கல்விக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதற்கான என்.ஜி.ஓ, சூழ்ச்சி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு எதிராகக் கதைப்பதற்கு ராஜா கொல்லுரேக்கு முதுகெலும்பிருந்தது. மாணவர்களை நேசிக்கும் அனைத்துப் பெற் றோரும் அவரின் கருத்தை அனுமதிப்பார்கள். அவரின் கூற்றில் தவறு கிடையாது. நல்லாட்சி அரசுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேறி ஆரம்பம் முதல் எம்முடன் இணைந்து செயற்பட்டவர் தான் ராஜா கொல்லுரே - என்றார்.

பாடசாலைக்கு சமுகமளிக்காத அதிபர், ஆசிரியர்களின் நவம்பர் மாதச் சம்பளம் இடைநிறுத்தப்படும் என்று வடமேல்மாகாண ஆளுநராகச் செயற்படும் ராஜா கொல்லுரே கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு எதிர்ப்புகள் வலுத்தன. இந்த நிலையில் அவரிடமிருந்து தலைமைப் பதவியையும் கம்யூனிஸ்ட் கட்சி பறித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4-44)





# சாட்சியமற்றோர் சிறையில் குற்றவாளிகளோ வெளியே!

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக்.26**

**இலங்கையில் நீதித்துறைப் பற்றிய மீளாய்வு நடப்பதில்லை. கொண்டுவரவுள்ள திருத்தங்கள் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுவருவதே பொருத்தமானதாக இருக்கும். மாறாக துண்டு, துண்டாக திருத்தங்கள் கொண்டுவரப்படும்போது, அவற்றுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்கள் கவனிக்கப்படாது போகும் ஆபத்து உண்டு.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தண்டனை குறைப்பு மற்றும் விலக்கு சட்ட திருத்தம் தொடர்பான விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குற்றச்செயலில் ஈடுபட்டமைக்கான எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாதவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆதாரங்கள் உள்ளவர்களோ விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதாரங்கள் இருந்தும் உங்கள் பக்கமிருப்பதனால் அவர்களைச் சுதந்திர மாக நடமாட அனுமதித்திருக்கிறீர்கள். இதுதான் உங்களின் தண்டனை விலக்கு. இந்த விடயத்தை நீங்கள் சரிசெய்யாவிட்டால் எத்தனை திருத்தங்களைக் கொண்டு வந்தாலும் அவற்றுக்கு எந்தவித அர்த்தமுமில்லை. குற்றவியல் சட்டக்கோவை தொடர்பிலான திருத்தங்க ளில் சாவுத் தண்டனை தொடர்பில் முன்வைக்கப் பட்டிருக்கும் திருத்தத்தை வரவேற்கலாம். ஆனால் சாவுத்தண்டனை விடயத்தில் நாம் ஏன் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமறுக்கிறோம்? இன்றைய உலகில் சாவுத்தண்டனை விதிப்பதன்மூலம் குற்றச் செயல்களை குறைக்க முடியாது என்பதை நாம் அறிவோம்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நடைபெற்ற சம்பவத்தை உதாரணத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த விடயம் தொடர்பில், அமைச்சர் பரிந்துரைத்த மூன்று நடவடிக்கைகள் தொடர்பில் எதுவும் நடக்கவில்லை. அதில் ஒரு பரிந்துரையாக இரகசியப் பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தார். இன்றுவரை இரகசியப் பொலிஸார் அங்கு சென்று எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு எதிரான நீதி விசாரணை துரிதப்படுத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும் என எமக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றார். (எ-26)

### தனிமைப்படுத்தலை மீறிய இருவருக்குத் தண்டம்

வவுனியா, ஒக். 26

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய இருவருக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றால் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

பூவரசன்குளம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் தனிமைப்படுத்தல் சட்ட விதி முறைகளை மீறியவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன. இதன்போது தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. இதேவேளை, முகக் கவசம் இன்றி நடமாடிய நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-110)

### மாணவர்களுக்கு சைக்கிள்கள் கையளிப்பு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் பொருளாதாரம் நலிவடைந்த 10 மாணவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தால் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபரின் பரிந்துரைக்கமைய வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிதியுதவியில் உதவிப் பிரதேச செயலர் சைக்கிள்களை வழங்கி வைத்தார். (ச-9)

# சிமெந்துக்குத் தட்டுப்பாடு கட்டட வேலைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.26

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதிகளவான கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.**



தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு மேல் கடைகளில் சிமெந்து விற்பனைக்கு வைக்கப்படவில்லை. இதனால் கட்டடப் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைமைக்கு ஒப்பந்தகாரர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.


ஆரம்பத்தில் மணலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் கட்டட வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

தற்போது சிமெந்துத் தட்டுப்பாட்டால் அரைகுறை வேலைகளை நிவர்த்தி செய்ய முடியாத ஒப்பந்தகாரர்கள் திண்டாடி வருகின்றனர். இதனால் கட்டடப் பணியாளர்கள் நாளாந்தம் வருமானத்தை இழந்துள்ளனர்.

சிமெந்துத் தட்டுப்பாட்டைக் காரணம் கூறி கட்டடப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், மேசன் தொழிலாளர்கள் தற்போது வேறு தொழில்களை நாடிச் செல்கின்றனர்.

எனினும் சில விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு வரப்படும் சிமெந்து அடுத்த ஒரு சில மணி நேரங்களில் விற்றுத் தீர்ந்து விடுகின்றது.

பெரும் ஒப்பந்தகாரர்கள் ஒரே தடவையில் அதிகளவு சிமெந்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் சிறு சிறு ஒப்பந்தகாரர்கள் சிமெந்துக்காக கடைகளுக்கு அலைந்து திரிகின்றனர். (ஒ-4)



## கொடிகாமம் நகரில் துப்புரவுப் பணிகள்

கொடிகாமம், ஒக்.26

கொடிகாமம் நகரப்பகுதியில் கொடிகாமம் பொலிஸ் அதிகாரிகளின் தலைமையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. நகரில் சுத்தமற்ற இடங்களைத் துப்புரவு செய்யும் வேலைத்திட்டத்தில் நகர வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்களுடன் பொலிஸாரும் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ச-159)

## பிரதேசசபை உறுப்பினரால் குப்பைத்தொட்டிகள் வைப்பு

கொடிகாமம், ஒக் 26

கொடிகாமம் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கப்படும் குப்பைத் தொட்டிகள் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெயதாஸால் வைக்கப்பட்டுள்ளன.

உறுப்பினர்களுக்காக 2021 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட சபை நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் குறித்த குப்பை தொட்டிகள் கடந்த வியாழக்கிழமை வைக்கப்பட்டன. (ச-159)



## மாடு வெட்டியவர் நெல்லியடியில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

சட்டவிரோதமாக மாடு வெட்டினார் என்ற குற்றச்சாட்டில், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

50 கிலோகிராம் மாட்டு இறைச்சியையும் பொலிஸார் கைப்பற்றினர். கைதானவர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-125)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 26

நெல்லியடிப் பகுதியில் கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர். அவரிடமிருந்து 2 கிராம் 50 மில்லிகிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-125)

## விண்ணப்ப காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, வடமாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு நடத்தும், இளைஞர்களுக்கான சுவரொட்டி மற்றும் குறும்படப் போட்டிகளுக்கான விண்ணப்பகாலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்று அமைச்சின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்பூசியில் அக்கறையில்லை

வவு. பல்கலைக்கழக மருத்துவர் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 26

பல்கலைக்கழக மாணவர்கள் கொரோனாத் தடுப்பூசி பெறுவதில் அக்கறையற்றுள்ளனர் என்று வவுனியா பல்கலைக்கழகத்தின் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அஞ்சலி நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பல்கலைக்கழகத்தில் அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

எனினும், தடுப்பூசி பெறுவதில் பலரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. பைசர் தடுப்பூசியா செலுத்துகின்றனர் என்ற கேள்வியை எழுப்பினார்களே தவிர சினோபாம் ஊசி என்றவுடன் பின்னடித்தனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 6 தடுப்பூசிகளில் சினோபார்மும் உள்ளடங்குகின்றது. எனவே, பல நாடுகளுக்கு செல்வதற்கான அனுமதி சினோபார்ம் ஊசி ஏற்றியவர்களுக்கும் உண்டு.

எனினும், அதனைச் சிலர் உணரவில்லை. தடுப்பூசி பெற்றவர்களின் இறப்பு வீதம் தற்போது குறைவாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க ஆர்வம் காட்டவேண்டும் - என்றார். (கு-110)

## நஷ்டத்தில் இயங்கும் அரச ஊடகங்கள் இலாபமீட்டும் நிலைக்கு வரவேண்டும்

ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26

நஷ்டத்தில் இயங்கும் அரச ஊடகங்களை மீண்டும் இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவர ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரச ஊடகங்களில் படைப்பாற்றல் குறைந்து வருவதை ஏற்றுக்கொண்ட அமைச்சர், இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வெகுஜன ஊடகத்துறை அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊடகமொன்றைப் பராமரிப்பதற்கு ஒரு நிறுவனத்துக்கு மாதமொன்றுக்கு 35 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது. சில நிறுவனங்களுக்கு 45 மில்லியன் ரூபா வரையில் செலவாகின்றது. அரச ஊடகங்கள் வணிக ரீதியாகத் தோல்வியடைவதை அரசால் தாங்க முடியாது.

இதனைவிடவும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் வன்முறைகள் நிறைந்த மற்றும் சிறுவர்களுக்குப் பொருத்தமற்ற விடயங்களுடன் கூடிய திரைப்படங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. அவற்றை விளம்பரப்படுத்தப் பொருத்தமான ஒளிபரப்பு நேரத்தைப் பரிந்துரைப்பதற்கு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டியது அவசியம்.



வடபகுதியில் உள்ளவர்களில் 85 சதவீதமானவர்கள் இந்தியத் தொலைக்காட்சிகளைப் பார்வையிடுவதற்குப் பழகியிருப்பதால் அந்தப்பகுதிகளில் உள்ள சிறுவர்கள் மத்தியில் இந்தநாட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் பொது அறிவு குறைவாகவே உள்ளது.

அரச ஊடகங்களின் ஊடாக வழங்கப்படும் தகவல்கள் நாட்டில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் சரியாகக் கடத்தப்படாமையே இதற்குக் காரணம்.

அரச ஊடகங்களின் பணிப்பாளர் சபையில் தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டியது அவசியம். நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமையின் காரணமாக அடுத்த வருடம் அமைச்சுக்கான எந்தவொரு புதிய கட்டமானப் பணிகளுக்கும் அரசின் நிதி ஒதுக்கப்படாது. - என்று தெரிவித்தார். (கு)

# கைதிகள் விரும்பும் சிறைக்கு அவர்களை மாற்றிவிடுங்கள்

## அருட்தந்தை மா.சக்திவேல் வலியுறுத்து

**வவுனியா, ஒக். 26**

**"பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மன அழுத்தத்திலிருந்து விடுபட, அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றவேண்டும் என்பதோடு அவர்களுக்கு நீதியும் கிட்ட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர்" என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தயின் கொலை அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்த அநுராதபுரம் சிறைச்சாலை அரசியல் கைதிகள் எட்டுப் பேரின் அடிப்படை உரிமை தொடர்பான வழக்கு கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பாக முன்னின்று உதவி சொலிசிட்டர் ஜெனரல் ரஜீவ் குணதிலக்க "கைதிகள் தங்களை யாழ்ப்பாண சிறைக்கு மாற்றுமாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றதோடு அதற்குக் காரணம் "அவர்கள் உறவினர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வார்கள்" என்பதாகும் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தக்கூற்று உண்மையெனில், இது நியாயத் தன்மை அற்றது மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறும் மற்றும் அதனை அவமதிக்கும் செயலுமாகும்.

ஒருவரை நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பிடும் வரை அவர் நிரபராதியே.

அத்தோடு "சிறைக் கைதிகளும் மனிதர்களே" எனும் மகுடவாசகம் சிறைச்சாலைச் சுவரிலே எழுதப்பட்டுள்ள நிலையில் சிறைக்கைதிகள் தமக்கான உதவிகளையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவர்களே. அதற்கு சட்டத்தில் இடமுண்டு.

அத்தோடு ஒரு நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பிட்ட ஒருவர் சட்ட உதவியோடு மேல் நீதிமன்றுக்கு மீண்டும் மனு செய்யும் உரிமையும் உள்ளது. இதனைத் தடுக்க எவராலும் முடியாது.

குற்றம் புரிந்தவராகக் கருதப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆட்சியாளர்களின் உதவியோடு வேறு ஒரு இராஜாங்க அமைச்சுப் பதவியைத் தக்கவைத்துக் கொண்டு சுதந்திரமாக நடமாடித் திரிகின்றார். இது எந்தவகையில் நியாயம்? - என்றுள்ளது. (து-110)

# அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ.20 மில்லியன் நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி ஒக்.26

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, உள்ளூராட்சி அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தால், 20 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி கிடைத்ததும் நுணாவில் மேற்கு தேவாலய வீதியில் மூன்றாம் கட்ட வேலைகளை மறவன்புலவு தண்டவாளம் வரை புனரமைக்கவும், மண்டுவில் வட்டாரத்தில் மருதடி வீதியைப் புனரமைக்கவும் பயன்படுத்த வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு பிரதேச மக்கள் நுணாவில் பகுதி ஊடாக பயணிக்க, தேவாலய வீதி குறுகிய பாதை என்பதால் பெருமளவு மாணவர்கள் அரசபணியாளர்கள் உள்ளிட்ட மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் வீதியின் இரு பக்கங்களிலும் நெல்வயல்கள் உள்ளதால் காலபோக நெற்செய்கைக் காலத்தில் வாகனங்களும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்பட்டதால் புனரமைத்து வழங்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து, ஒரு பகுதி புனரமைக்கப்பட்டது.

பின்னர் உள்ளூராட்சி அபிவிருத்தி உதவிகள் நிகழ்ச்சித் திட்ட நிறுவன நிதி ஒதுக்கீட்டில், இரண்டாம் கட்டமாக கொல்லங்கிராய் மயானம் வரை புனரமைக்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக மிகுதியாக உள்ள மறவன்புலவு தண்டவாளம் வரையான பகுதியைப் புனரமைக்க வேண்டும் என்று சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

# சைவத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்

## ஆறு.திருமுருகன் இரங்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை கடந்த 60 ஆண்டுகளாக சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அவரது இழப்பை ஈடுசெய்ய முடியாது என்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

சைவப்புலவரின் மறைவு குறித்து அவர் அனுப்பியுள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கையில், ஆசிரியராக, அதிபராக, சிறந்த சொற்பொழிவாளராக, படைப்பாளியாக எம் மத்தியில் விளங்கிய பெரியாரின் மறைவு கவலைக்குரியது.

சைவ சித்தாந்தத்துறையைக் கற்பிப்பதில் தனது உயிர் பிரியும்வரை அரும்பாடுபட்டவர். யாழ்ப்பாணத்திலும்,கொழும்பிலும் பல சமய வகுப்புக்களை நடத்தி பலரை சைவப் புலவராக மிளிரவைத்த பெருமை இவரைச் சாரும். இத்தகைய அறிஞரின் இழப்பு ஈடு செய்ய முடியாது- என்றார். (ஒ-4)

# ஜனநாயகம் மீதான நம்பிக்கை மக்களிடம் முழுவதும் சிதைவு

## சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஒக். 26

ஒழுக்கமற்ற முறையில் செயற்படுகின்ற சில உள்ளூராட்சி உறுப்பினர்களின் நடத்தைகளால் ஜனநாயகம் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற நம்பிக்கை முழுமையாகச் சரிவடைந்துள்ளது என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எனவே இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அவற்றில் தவறிழைத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை காணப்படுகிறது.

எனவே இவ்வாறான பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சியின் செயலாளர்கள் இவை தொடர்பில் அவதானம் செலுத்தி, உரிய ஒழுக்காற்று நடவக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்துகின்றது - என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி

கொடிகாமம்,ஒக். 26

மந்துவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 10 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

மந்துவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக வேள்ட்விஷன் நிறுவனத்தால் தோட்டம் செய்யும் பயனாளிகளுக்கு சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. (ஜ-159)

# தமிழின் செழுமையை பேணிய பெருந்தகை

## *சைவப்புலவருக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இரங்கல்*

யாழ்ப்பாணம்,ஒக்.26

பாரம்பரியக் கல்வி முறைகளால் தமிழையும், சைவத்தையும் கற்றுத் தேர்ந்த சைவப்புலவர் சு.செல்லத்துரை, தான் கற்றுவந்த பாதைகளின் ஊடாகவே தமிழைப் பாதுகாப்பதிலும் பங்களிப்புச் செய்தவர்.

இவ்வாறு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் இ.சர்வேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் தெரிவிக்கையில்,

திருமந்திரத்தை அறிவுப் பாரம்பரியத்தினூடாக தலைமுறைக் கையளிப்புச் செய்வதற்கு தன்னாலியன்ற பங்களிப்பை நல்கியவர். தொழில்சார்ந்து ஆசிரியராக, அதிபராக கல்வித்துறையில் பணியாற்றிய அவர் நேர்மைமிக்க நிர்வாகப் பண்புகளாலும், தலைமைத்துவத்தாலும் அழகுபடுத்தியவர்.சைவச் சொற்பொழிவுத்துறையிலும் முக்கியமான கர்த்தாவாகவிருந்த அவரது குரல்வாண்மையும், குரல்கலாசாரமும் தனித்துவமானவை- என்றார். (ஒ-4)

# போட்டோ பிரதி இயந்திரம் கையளிப்பு

கொடிகாமம், ஒக். 26

வரணி மத்திய கல்லூரிக்கு சுவிஸ் ஒன்றியத்தால் போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று கல்லூரி அதிபரிடம் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத்தினரதும் பாடசாலை சமூகத்தினரதும் வேண்டுகோளுக்கமைய 4 லட்சம் ரூபா பெறுமதியான போட்டோ பிரதி இயந்திரம் கனடா ஒன்றியத்தின் தலைவர் சுப்பிரமணியத்தால் அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச-159)



### இலங்கைக் கடற்பரப்பில்

# மீன் வள அழிவுக்கு நாராவும் காரணம்

## பூநகரி மீனவர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஒக்.26

**எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலை விட, உள்ளூர் மீனவர்களின் அத்துமீறலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக குருநகர் பகுதி மீனவர்களால் எமக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு நாரா நிறுவனமும் காரணம் என்று பூநகரி கடற்றொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ் தெரிவிக்கையில்,

1990, 1993ஆம் ஆண்டுகளில் 50க்கு உட்பட்ட றோலர் படகுகளே குருநகரில் நின்றன. அப்போது இதனை முழுமையாகத் தடை செய்யக்கோரி, மாற்றுத் தொழிலுக்காக முல்லைத்தீவில் இருந்து கடன் அடிப்படையில் மாற்றுத் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அவ்வாறான சூழலில் 400 படகுகள் தற்போது உள்ளன. இவை எப்படி வந்தன என்பதை அவர்களின் அபிவிருத்திச் சங்கத்தின் பதிவைப் பரீட்சித்தால் தெரியும்.

இந்த நிலையில் குருநகர் மீனவர்களின் படகுகள் எமது பகுதிக்குள் நுழைந்தமையால் பலநூறு கோடி ரூபா இழப்பு எமக்கு ஏற்பட்டது. இன்று வரை அவை தொடர்கின்றன. எம்மால் சில படகுகள் கைப்பற்றப்பட்டபோதும், அபிவிருத்திச் சங்கம் இழப்பீடு செலுத்துவதாகக்கூறி படகுகளை எடுத்துச்சென்றனர். எனினும் எமக்கு இழப்பீட்டைச் செலுத்தவில்லை.

எம்மைப் பொறுத்தவரையில் குருநகர் மீனவர்களையும், எம்மையும் நாசமாக்கியதில் பெரும்பங்கு நாரா நிறுவனத்தைச் சேரும். ஏனெனில் இவர்கள் முன்னுக்குப் பின் முரணான அறிக்கையை விட்டு ட்றோலருக்கு அனுமதிக்குமாறு அறிக்கையை விட்டுள்ளனர். எமது சிறுகடலில் உள்ள வளத்தை அழிக்கும் உண்மைதெரியாத ஆலோசகரின் கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அனுமதி இல்லாத இந்தத் தொழில் முறைமைக்கு எவ்வாறு திணைக்களத்தினர் அனுமதி வழங்குகின்றனர் என்பதிலும் எமக்குச் சந்தேகம் உள்ளது- என்றார். (ஒ-4)

## 2022 பட்ஜெட்டில் சைகை மொழி

கொழும்பு, ஒக். 26

2022ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட விவாதத்தை, செவிப்புலனற்ற நபர்களும் தெரிந்துகொள்வதற்காக, சைகை மொழியிலும் நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அனுமதியளித்துள்ளது.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவால், நவம்பர் மாதம் 21ஆம் திகதியன்று வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர், பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும். அதனை சைகை மொழியிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம், தொலைக்காட்சிகளில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. அதன்போது, சைகைமொழி பயன்படுத்தப்படும். இவ்வாறான யோசனையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவே முன்வைத்தார். இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## தையல் இயந்திரம் கையளிப்பு

முல்லைத்தீவு, ஒக்.26

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் கிராமத்தில் குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரத்துக்காக தையல் இயந்திரம் வழங்கப்பட்டதுடன், வீட்டுக்கான மின் கட்டணமும் செலுத்தப்பட்டது.

கனடாவில் வசித்து வரும் தசிபரன்-நிரஞ்சனா தம்பதியின் புதல்வர்களான நிகரன் மற்றும் நிதுசன் ஆகியோரது பிறந்த தினத்தை முன்னிட்டு 'விடியல்' அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)

## கலாநிதிப் பட்ட ஆய்வுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள்பீடம் முகாமைத்துவத்தில் முனைவர் (கலாநிதி) பட்ட ஆய்வுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முகாமைத்துவ முதுதத்துவமாணி பட்டம் அல்லது முகாமைத்துவத்தை தமது முதுமாணி ஆராய்ச்சியாக கொண்டவர்கள் இம் முனைவர் பட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும். நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## பனையோலைசார் உற்பத்திகள் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில், பனையோலை தொடர்பான விசேட பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு கைப்பணிப்பொருள்களை உருவாக்கும் இந்த விசேட பயிற்சிகள் 3 நாள்கள் இடம்பெறும்.


ஆர்வம் உடையவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரங்களை தலைவர் அல்லது செயலாளர், பிரதேச சபை காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

பயற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். பனை அபிவிருத்திச் சபையின் விசேட வளவாளர் திருமதி இராஜரேகா தர்மகுலசிங்கம் பயிற்சிகளை வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## காற்றுடன் கடும் மழை: வீடுகள், மரங்கள் சேதம்

வவுனியா, ஒக்.26

வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை கடும் காற்றுடன் பெய்த மழை யால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. பல பயன்தரு மரங்களும் அழிந்துள்ளன. வவுனியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை காற்றுடன் பெய்த மழையால் இராசேந்திரங்குளம், சூடுவெந்தபுலவு ஆகிய இடங்களில் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. சில வீடுகளின் கூரைத்தகடுகள் காற்றால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.



அதேவேளை அரபாத் நகர் பகுதியில் கடும் காற்றால் வாழை மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் அழிவடைந்துள்ளன. மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக இடர் முகாமைத்துவப் பிரிவினர் தகவல்களை சேகரித்து வருகின்றனர். (எ-110)

## தொழில் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைதொழிற்பயிற்சிஅதிகார சபையானது NVQ சான்றிதழுக்கான முழுநேரக் கற்கைநெறிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், பண்டத்தரிப்பு, சுன்னாகம், வல்வெட்டித்துறை ஆகிய பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். கற்க விரும்புவோர் நாளை புதன்கிழமைக்கு முன்னர் யாழ்.மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் அல்லது பிராந்திய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (ஒ-4)

## சைவப்புலவர் செல்லத்துரை இந்துக்களுக்கு ஒரு வழிகாட்டி

கொழும்பு,ஒக்.26

சைவப்புலவர், கலாபூஷணம் சு.செல்லத்துரை, இந்துக்களுக்கு அர்ப்பணிப்பானதொரு வழிகாட்டியாக, நல்லதொரு ஆலோசகராகத் திகழ்ந்தவர் என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கையில், ஈழத்திரு நாட்டில், சைவப்புலவர் என்றவுடன் அனைவரும் சொல்லிய நாமம் இவர் பெயரே. யாழ்ப்பாணம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தின் மாணவனான இவர், அதே பாடசாலைக்கு அதிபருமாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்த பண்பாளன். இவர் சமய நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், கூத்து, பஜனை, வில்லுப்பாட்டு என அத்தனை கலையிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர். சைவ சித்தாந்தப் புலவர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவர் -என்றார். (ஒ-4)

## இளைஞர்களுக்கான வதிவிடப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு மாகாண இளைஞர்களின் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் நோக்குடன், துறைசார் வதிவிடப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வீட்டுத்தடாகங்களில் மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, கலட்டை வளர்ப்பு, மீன்குஞ்சு உற்பத்தி செய்தல், மீனுணவு உற்பத்தி செய்தல், கொடுவா மீன் வளர்ப்பு, புகை மற்றும் உப்புக் கருவாடு தயாரிப்பு, சிப்பி வளர்ப்பு, பாலைமீன் வளர்ப்பு, பாறைப்படிம வளர்ப்பு, இறால் வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, கடலட்டைக்குஞ்சு வளர்ப்பு, சிங்க இறால் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு உள்ளிட்ட பயற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்துக்குட்பட 19 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்கள் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து, வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு, எதிர்வரும் டிசெம்பர் மாதம் பயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், தொழில் முனைவோருக்கு கடன்வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இலவசமாக நடத்தப்படும் இந்தப் பயிற்சிகளுக்கு, நிரந்தர வருமானம் பெற்றுக்கொள்வோர் பங்குபற்ற முடியாது.

விண்ணப்பப்படிவங்களை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களான பூநகரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களிலும், மாகாணக் கல்வி அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மென் பிரதிகளை http//edumin.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# பல்கலைகளை ஆரம்பிப்பதற்கு அரசு ஏன் அச்சமடைகின்றது?

### பல்கலை மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீதன்ன தேரர் கேள்வி

**கொழும்பு, ஒக். 26**

**'ஆரம்பப் பிரிவு மாணவர்களுடைய கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியுமென்றால் ஏன் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க முடியாது? ஏன் அரசு அச்சமடைகின்றது? இவ்வாறு அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீதன்ன தேரர் கேள்வியை எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கல்வித்துறையின் கட்டமைப்பு ஸ்தம்பித்து இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. ஒருபுறம் பல்கலைக் கழக கட்டமைப்பும் மறுபுறம் பாடசா லைக் கட்டமைப்பும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஆனால், இந்தக் காலப்பகுதிக்குள் பாடசாலையையோ அல்லது பல்கலைக் கழகத்தையோ ஆரம்பித்தல் தொடர்பான எந்தச் செயற்றிட்டங்களும் அரசிடம் இருக்க வில்லை.

தற்போதைய நிலைப்பாட்டினுள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழ கங்களை ஆரம்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை நாமும் அரசி டம் முன்வைத்திருந்தோம். ஆனால், அது தொடர்பில் அரசு எந்தக் கலந் துரையாடல்களையும் மேற்கொள் ளவில்லை.

மாறாக அவர்கள் நிகழ்நிலை கற் றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மாத்திரமே முன்னெடுப்பதற்கான யோசனையை முன்வைத்தனர். ஆரம்பப் பிரிவு மாணவர்களுடைய கற்றல், கற்பித்தல் நடவடிக்கை களை ஆரம்பிக்க முடியுமென்றால் ஏன் பல்கலைக்கழகங்களை ஆரம் பிக்க முடியாது? ஏன் அரசு அச்ச மடைகின்றது?' -என்றார். (ம-22)

## யாழில் மாணவர்களின் வரவு சற்றுக் குறைவு

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாண மாவட் டத்தில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசா லைகளில் மாண வர்களின் வருகை குறைந்தளவிலேயே காணப்பட்டதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக் கின்றன.

நாடு பூராகவும் ஆரம் பப்பிரிவு பாடசாலை கள் ஆரம்பிக்கப் பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாண மாவட் டத்திலும் உள்ள ஆரம்பப்பிரிவு பாட சாலைகளும் வழ மைபோல் நேற்று ஆரம்பமாகி இயங்கு நிலைக்கு வந்தன.

எனினும், பாடசா லைகளில் மாண வர்களின் வரவு குறைவாகக் காணப் பட்டது என்றும் பாட சாலைக்கு வந்த மாணவர்களோடு கற்பித்தல் செயற் பாடுகள் முன்னெ டுக்கப்பட்டன என் றும், மாகாணக் கல்வியமைச்சின் தகவல்கள் தெரிவிக் கின்றன. (த-20)

# இந்திய தியாகிகளின் கண்காட்சி யாழில்

யாழ். பொது நூலகத்தில், இந்திய சுதந் திரத்துக்காக பாடுபட்ட தியாகிகளின் திரு வுருவப் படங்களின் கண்காட்சி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட் ராஜ் மற்றும் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோர் கூட்டாக கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத் தின் ஏற்பாட்டில், "ஆசாதிகா அம்ரித் மஹோற்சவ்"கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இது ஆரம்பிக்கப்பட்டது என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் ஊடக அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், துணைத் தூதரக அதி காரிகள், தலைமை நூலகர், நூலக அதிகாரிகள் மற்றும் நூலகத்தின் வாச கர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கொரோனா குறித்த உள்ளூர் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி நிகழ்வு கள் நடத்தப்பட்டன.




பொதுநூலகத்தில், பாரத ரத்னா டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் திருவுருவச் சிலை ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தால் வழங் கப்பட்ட 50 ஆயிரம் புத்தகங்களுடன் இப்போது இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகைப்படத் தொகு தியையும் கொண்டுள்ளது. தற்போது இந்தியாவின் சுதந்திரப் போராட்டம், சுதந்திரத்துக்குப் பின்னான வளர்ச்சி மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான மற்றும் வரலாற்று உறவுகளை பறைசாற்றுகி றது - என்று மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது. (த)


## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 05 . 1941



இறப்பு 23 . 10 . 2021

**இராசரெத்தினம் அந்தோனிப்பிள்ளை (திரேசம்மா)**

1Q ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம் இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் அந்தோனிப் பிள்ளை (திரேசம்மா) கடந்த 23.10.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வினாயகமூர்த்தி - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், கிளி. காலஞ்சென்ற மனோகரன், நிர்மலா (லண்டன்), தேம்பா றெஜி (லண்டன்), சுகிர்தன் (கிளை முகாமையாளர்), ரவி (லண்டன்), பிரபா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அடைக்கலம், தில்லைநாதன் (லண்டன்), ராசு (தினேதினி களஞ்சியம் -இரணைப்பாலை), அனிற்றா (லண்டன்), யூட்சினி, தாமரை (லண்டன்), பிருந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கமானது இன்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இரணைப்பாலை பற்றிமா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இரணைப்பாலை பற்றிமா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

இ.சுகிர்தன் (மகன் -077 345 4583)

இ.றெஜி (லண்டன் மகள் - 0044 7722

தகவல்: குடும்பத்தினர்


### சூடான் பிரதமர்...

அமைந்திருக்கும் சூடானில் பெரும்பா லான மக்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர்.

சூடான் நாட்டில் தற்போது வரை இடைக் கால அரசு ஆட்சியில் உள்ளது. இந்த அரசின் பிரதமராக இருக்கிறார் அப்துல்லா ஹாம்டாக். முன்னதாக நீண்ட காலமாகவே (1989 முதல் 2019 வரை) ஒமர் அல் பஷீர் சூடான் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். அவர் ஆட்சியின் மீது மக்கள் அதிருப்தி கொள்ள இராணுவத்துணையுடன் மக் கள் அவரை ஆட்சியிலிருந்து அப்புறப் படுத்தினர். பின்னர் அமைந்த இடைக் கால அரசின் பிரதமரானார் அப்துல்லா ஹாம்டாக்.

இந்தநிலையில், அண்மைக்காலமா கவே இடைக்கால ஆட்சிக்கு எதிராக இராணுவத்தில் ஒரு பிரிவினர் செயற் படத் தொடங்கினர். இவர்கள் அவ்வப் போது ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் ஈடு பட்டு வந்தனர்.

கடந்த ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்க ளில் அப்படியான முயற்சி நடைபெற அதனை சூடான் அரசு துரிதமாக செயற்பட்டு தடுத்தது.

ஆனால், நேற்று அதிகாலை, அப் துல்லா ஹாம்டாக்கை இராணுவத்தினர் வீட்டுச் சிறையில் வைத்தனர். பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. நாட்டில் பதற்றமான சூழல் நிலவுவதால் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தினார் அந்நாட்டு இராணுவத் தளபதி.

சதிப்புரட்சிக்கு ஆதரவளிக்க மறுத்ததை அடுத்து பிரதமர் அப்துல்லா ஹம் டோக்கை அடையாளம் தெரியாத இடத் துக்கு நகர்த்தி, இராணுவம் வீட்டுக்காவலில் வைத்திருப்பதாக தக வல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சூடான் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களும் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இராணு வத்தின் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி, இராணுவ அரசுக்கு ஒத்துழைக்காமலிருப்புடன், போராட் டங்களுக்கும் அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. (த-இ)

## கண்ணீர் அஞ்சலி


வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பிரனராக
உள்ள வைத்தியகலாநிதி **திருமதி வி. வனிதா**
அவர்களின் அன்பு தாயார்

**மகேந்திரன் வேவிசரோசா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வட மாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்**

## முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு
03.09.1948

உதிர்வு
07.11.2020

**அமரர் சிவபாததுரை கமலாதேவி**

அருளும் அன்பும் அகத்தினிலேந்தி
அயலை உறவை அனுதினம் பேணி
பெருமை மிக்க வாழ்வெமக் காக்கி
பெரியோர் பலரைப் போற்றிப் புரந்து
கருணை மிக்க அன்னையாம் எங்கள்
கமலாதேவி கடவுளாய் ஆகி
வருடம் ஒன்று கழியும் இவ்வேளை
வழுத்தி அவரடி வணங்குவோம் யாமே!

**குடும்பத்தினர்**
அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

வாளுடன்..
பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
இந்தச் சம்பவம், நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது..
மல்லாகத்தில் அவர்களைச் சோதனையிட்டபோதே, மோட்டார் சைக்கிளில் வாளை மறைத்தவாறு பயணித்தமை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
18, 20, 21 வயதான இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் கத்தி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணை நிறைவடைந்த பின்னர் அவர்கள், நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-10)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
### பதவி வெற்றிடங்கள் - நேரடி நேர்முகத் தேர்வு

**கீழ்க்காணும் பதவிகளுக்கு**
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. உபவிடுதிக் காப்பாளர் (ஆண் / பெண்)
2. சமையலாளர்
3. பண்ணைத் தொழிலாளர்

- சம்பளம் பேசி நிர்ணயிக்கப்படும்.
- சுயவிபரத்தோடு அலுவலக நேரத்தில் நேரில் வருக.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
தொ .பே.இல : 021 222 6525

லோ.துஷிகரன்
செயலாளர்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 45 ரூபா
077 334 1281

## வீடு வாடகைக்கு

யாழ் நகருக்கு அண்மையில் சகல
வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
077 959 6692

## 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்**
பிறப்பு
07.01.1932
இறப்பு
26.10.1999

திருமதி பாலாம்பிகை
சிறிபாஸ்கரன் (மனைவி)

## பெயர் மாற்றம்

அரசடி வீதி தோப்பு அச்சுவேலி மேற்கைச்
சேர்ந்த **நாகமுத்து சிஷ்கராசா** ஆகிய
நான் எனது பெயரை **நாகமுத்து**
**சிங்கராசா** என மாற்றம் செய்து இன்று
முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும்
இப்பெயரையே பயன்படுத்துவேன்
என இத்தால் அனைவருக்கும்
அறியத்தருகின்றேன்
**நாகமுத்து சிங்கராசா**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



**திருமதி மகாலட்சுமி மாணிக்கவாசகர்**
**(ஓய்வு பெற்ற லிகிதர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)**


யாழ் கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி மாணிக்கவாசகர் நேற்று (25.10.2021) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் அமரர் பொன்னுத்துரை, அமரர் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர் மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், அமரர் முத்துலட்சுமி, அமரர் கமலலட்சுமி, அமரர் பரமானந்தம் ஆகியோரின் சகோதரியும், அமரர் க.சேமபராபரன் (முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), அமரர் திரவியநாயகம், மகேந்திர நாயகம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், திறந்த பல்கலைக்கழகம்), கிருபாகுமாரி (நூலகர், யாழ் பொது சன நூலகம்), சாந்தகுமாரி, கேதீஸ்மலர் (UK), புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பத்மராகினி (ஜேர்மனி), ஜீவலதா (சித்த மருத்துவர், ஏழாலை) ஆகியோரின் சிறிய தாயாரும், மதிவதனா, விஷ்ணுதாசன் (விஷ்ணு நகைத் தொழிலகம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்), விஷ்ணுகலா, ஹேமா, உதயகுரு (Singapore), பிருந்தினி (UK), உதாகரன் (கச்சேரி), சிவா (ஜேர்மனி), கலா, மோகன் ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**மருமகன் - விஷ்ணுதாசன்**
**விஷ்ணு நகைத் தொழிலகம்**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**0777 293676**

**108/3, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
1941 . 08 . 30



மறைவு
2021 . 10 . 25

**திரு. கனகசபாபதி சோமசேகரன்**

மல்லாகம் நீலியம்பனையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்பொழுது தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட
திரு கனகசபாபதி சோமசேகரன் அவர்கள் 25.10.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி – மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற நடராசா– சாலுமதிதேவி தம்பதிகளின் மருமகனும் உருத்திராதேவியின் அன்புக்கணவரும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான கனகேஸ்வரி, கௌரிதேவி மற்றும் தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர் இலங்கை பாராளுமன்றம்) பத்மாசனிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வித்தியலக்சுமி (லண்டன்), ரோகினி (லண்டன்) ஸ்ரீசத்தியசாயினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ் (லண்டன்), காண்டீபன் (லண்டன்), ஸ்ரீஜெயன் (Colombo Golden Tower (PVT) LTD) ஆகியோரின் மாமனாரும் அபி, ஆகாகஷ், சந்தோகஷ், அருகஷ், ஸ்ரீநிகா, ஸ்ரீநுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 1.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் குடும்பத்தினர்**
**0773557274, 0779454209**

## ஆளும் கட்சிக்குள்..

'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் திட்டத்துக்கு மொட்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் சுதந்திரக்கட்சி உட்பட 11 பங்காளிக்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. இது சம்பந்தமாக பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடன் பேச்சுகளையும் நடத்தின. எனினும், ஆரம்பக்கட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது. இந்தநிலையில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு பங்காளிக்கட்சிகள் முயற்சித்தன. கடிதமும் அனுப்பிவைத்தன. எனினும், பங்காளிகளை நேரில் சந்திக்க ஜனாதிபதி மறுத்துவிட்டார். பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் இது சம்பந்தமாக கலந்துரையாடுமாறும் அறிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அரசின் குறித்த திட்டத்தை முறியடிப்பதற்கு மக்கள் சக்தியை திரட்டுவதற்கு பங்காளிக்கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று அறியமுடிகின்றது.

உரப்பிரச்சினை பொருள்கள் விலையை அதிகரித்தமை உட்பட அரசின் சில நடவடிக்கைகளால், அரச கூட்டணிக்குள் ஏற்கனவே முற்றி புகைந்துகொண்டிருந்த பங்காளிக் கட்சிகளுக்கிடையேயான முரண்பாடுகளே முற்றிவெடித்துள்ளன என்று அத்தகைய கட்சிகளின் வட்டாரங்களிலிருந்து அறிந்துகொள்ளமுடிகின்றது.

இந்த விடயத்தில் சுதந்திரக்கட்சியினர் பெரமுன கூட்டணியினருடன் அடிக்கடி முரண்பட்டுக்கொண்டிருக்கின்றமை அனைவருக்கும் தெரிந்த விடயம். ஏனையபங்காளிக் கட்சிகளும் ஆளும் கூட்டணிக்குள்ளிருந்தே எதிர்ப்புக்களை, கண்டனங்களை வெளியிட்டுவந்தநிலையில், தற்போது அவை போராடுவதற்கு முடிவு செய்துள்ளன. (த-44)

## 11 பங்காளிகளும்..

கூட அந்தக்கட்சிகள் நடத்தியமை கிடையாது." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி.பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசிலுள்ள பங்காளிக்கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு முன்னால் வந்து அறிவிப்புக்களை விடுத்தாலும், அமைச்சரவைக்கூட்டத்தில் ஒன்றும் கதைப்பதில்லை. எமது நாட்டுக்கு எதிரான உடன்படிக்கைகளுக்கு எதிராக ஒரு வழக்கைக்கூட தொடுத்தது கிடையாது. வளங்களைக்காக்க போராடுவதும் இல்லை.

எனினும், ஏதேனும் ஒரு வாய்ப்பு கிடைத்தால், தமக்கு கவனிப்பு இல்லை, தமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படுவதில்லை, பேச்சுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்றெல்லாம் அழுது புலம்புகின்றனர். இவர்களுக்கு தன்மானம் மற்றும் அரசியல் தனித்துவம் இருக்குமானால் இவ்வாறு ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அரசியலிலிருந்து வெளியேறலாம்" - என்றார். (த-44)

## ஆரியகுளத்தின்...

ரையின் விகாராதிபதி விமலதேரர், இப்போது குளத்தின் பருத்தித்துறை வீதிப் பக்கமாக நடைபாதை அமைக்கப்பட்டு வருவதை உடனடியாக நிறுத்துமாறும், குளத்தைச் சுற்றுலாத்தேவைகளின் பொருட்டுப் பயன்படுத்தக்கூடாது என்றும் மாநகர முதல்வருக்குக் கடிதம் மூலம் கட்டளை பிறப்பித்துள்ளார். குளத்தின் அபிவிருத்திப் பணிகளில் நாகவிகாரையின் இத்தகைய நாட்டாண்மையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்.

ஆரியகுளத்தின் புனரமைப்புப் பணிகளில் அண்மைக்காலமாக நாகவிகாரை தலையிட்டு வருவது தொடர்பாக ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆரியகுளம் நாகவிகாரைக்கு உரித்தான குளம் அல்ல. ஆன்மீகத் தேவைகளின் பொருட்டு வேறு ஆலயங்களால் உருவாக்கப்பட்ட குளமும் அல்ல. இது மழைநீர் சேகரிப்பு மற்றும் வெள்ள நீர்முகாமைத்துவத்தில் தமிழ் மக்கள் கொண்டிருந்த அறிவைப் பறைசாற்றுகின்ற பண்டைய குளங்களில் ஒன்றாகும். வேறு குளங்களில் இருந்து படிமுறைகளில் நிரம்பிவழிகின்ற மழை நீரைச் சேகரிக்கும் பொருட்டும், மிகை மழைநீரைக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் யாழ்.நகர் வெள்ளத்தினுள் மூழ்காதிருக்கும் பொருட்டும் அமைக்கப்பட்ட குளம் ஆகும்.

ஆரியகுளம் தொடர் பராமரிப்பின்மையால் நாற்றமெடுக்கும் கழிவுக்குளமாக மாறி, நிலத்தடி நீர் மாசுபாட்டையும் சுகாதாரச் சீர்கேட்டையும் ஏற்படுத்தி வந்ததால் இது புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பலதரப்பும் பலகாலமாக வலியுறுத்தி வந்துள்ளது. தற்போது புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள யாழ். மாநகரசபை, குளம் யாழ்.நகர மையத்தில் நுழைவாசலில் அமைந்திருப்பதால் அதனை மக்களைக் கவரும் சூழல்சார் சுற்றுலா மையமாக அமைத்து வருகிறது.

இதனை விரும்பாத விகாராதிபதி அபிவிருத்திப் பணிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி வருகிறார். ஆரியகுளத்தில் ஒரு காலத்தில் பிக்குகள் நீராடினார்கள் என்ற கருத்தைப் பரப்புவதன் மூலம் குளத்தின் மீது உரிமை கொண்டாட முயலும் விகாராதிபதி அபிவிருத்திப் பணிகளை நிறுத்துவதற்கு அல்லது தமக்குரியதாக மாற்றி அமைப்பதற்கு யாழ்.மாநகர சபையை வற்புறுத்தி வருகிறார்.

இலங்கையில் பௌத்தத்துக்கே முதலிடம் என்ற வகையில் இவர் யாழ்.மாநகர சபையின் மீது அரசியல் மற்றும் இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் கூடும். ஆனால், யாழ்.மாநகர சபை குளத்தின் அருகேயுள்ள மக்கள் குடியிருப்புக்களினதும் வணக்கத் தலங்களினதும் இயல்பு நிலையைச் சீர்குலைக்காத வகையிலும், பண்பாட்டுப் பிறழ்வுகளை ஏற்படுத்தாத வகையிலும் அபிவிருத்திப்பணிகளை உறுதி செய்துகொண்டு எவ்விடர்வரினும் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும் என்றும் - தெரிவித்துள்ளார். (த)

## கொரோனா...

அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 12 ஆண்களும், 17 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 22 பேரும், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டோரில் 6 பேரும், 30 வயதுக்குட்பட்டவர்களில் ஒருவரும் உள்ளடங்குவர்.

இதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 640 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## தென்மராட்சியில்...

தெரிவித்தது.

அதன்படி, தென்மராட்சிப் பிரதேசத்தில், தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த 26 வயது இளைஞனும், மீசாலை மேற்கைச் சேர்ந்த 48 வயது குடும்பஸ்தரும் கடந்த 22 ஆம் திகதி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 79 வயது சட்டத்தரணியும் மரணமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூவரும் வெவ்வேறு சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள் எனவும், இவர்களில் இருவர் தொற்று ஏற்பட்ட நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையிலும் ஒருவர் மூச்சு விடுவதில் சிரமங்களை எதிர்நோக்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## எழுமாற்று...

அந்தப்பகுதியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாடு முழுவமாக கொரோனாத் தொற்று மற்றும் தொற்றால் ஏற்படும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், ஒரே இடத்தில் அதுவும் எழுமாற்று சோதனையில் 70 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டமை ஒட்டுமொத்த நாட்டின் முழுக் கவனத்தையும் ஈர்த்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர, நாட்டில் கொரோனா நோயாளர்களின் நாளாந்தப் பதிவுகள் குறைவடைந்து வந்தாலும் பண்டிகை நாள்கள் வரவிருப்பதால் அந்தக் காலகட்டத்தில் மக்களது செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் மருத்துவ பிரிவினர் எச்சரித்துள்ளனர். (த-இ)

## புதிய...

வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் என்ற ரீதியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் மாத்திரமே பாடசாலை சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் காலை 7.30 மணி முதல் பி.ப 1.30 மணி வரை மாத்திரமே கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவர். அதனைத் தவிர்த்து வேறு எந்த கல்விசார் செயற்பாடுகளிலும் ஈடுபடப் போவதில்லை.

வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலை செல்வதற்கான சூழல் இல்லை. காரணம் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையாகும்.

எனவே, அரசாங்கம் மாகாணங்களுக்கிடையில் பாடசாலை செல்லும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் - என்று தெரிவித்தார். (த-இ)

## வர்த்தகர்...

ரின் வாள்வெட்டுக்கு இலக்கானார். அவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

அவர், கனகபுரம் வீதியிலுள்ள தனது வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு ஆனந்தநகரிலுள்ள தனது இருப்பிடத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது கிளிநொச்சி அம்பாள்குள பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகில் வாள்வெட்டுக்குழுவினர் அவரை இடைமறித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து தப்பித்து ஆனந்த நகரிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று வாகனத்தை நிறுத்தியபோது, அவரைப் பின்தொடர்ந்து சென்று வாள்வெட்டுக்குழுவினர், வாளால் வெட்டிவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-6)

## இந்தியச்...

பயணம் மேற்கொண்ட நிலையில், திடீரென்று மன்னாருக்குச் சென்றார். மன்னாரில் எண்ணெய்ப் படுகை உள்ளதாகக் கூறப்பட்டுவரும் நிலையில், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கையில் இறங்கும் நோக்கில் அதானி மன்னாருக்குச் சென்றாரா என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

அவருடன் இராஜாங்க அமைச்சர் வி.சானக்க, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் சஞ்சய மொஹொட்டால ஆகியோரும் மன்னாருக்குச் சென்றிருந்தனர்.

கௌதம் அதானியும் அவரின் குடும்பத்தின் சிலரும், இரண்டு தனியார் விமானங்களில் நேற்றிரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதானி குழுமம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், அவர் இங்கு வருகை தந்துள்ளார்.

அவர், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் தொடர்பில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸவுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் அவர் மன்னாருக்குச் சென்றுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி போர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்ட இந்தியாவின் செல்வந்த வர்த்தகர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் கௌதம் அதானி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

## அரசிலிருந்து...

திபதியாக்குவதா என்ற பிரச்சினை எமக்கு உள்ளது. அதேபோல தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்சினையும் உள்ளது." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"உரப்பிரச்சினை மற்றும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் ஆகியன தொடர்பில் நாம் விமர்சனங்களை முன்வைத்தோம். இது சிலருக்கு வலித்திருக்கலாம். இதனால் அரசியலிலிருந்து வெளியேறி விமர்சனங்களை முன்வைக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

எமது கட்சி தீர்மானித்தால் பதவிகளை துறந்துவிட்டு நாளையே வெளியேறுவதற்கு நாம் தயார். எனினும், அத்தகையதொரு முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை. நாடு தொடர்பில் நாம் அதிகம் சிந்திப்பதாலேயே பொறுமை காத்துவருகின்றோம்.

அரசிலிருந்து வெளியேறிய பிறகு நாம் எங்கு செல்வது? சஜித்துக்கு பின்னால் சென்று, கைப்பாவையான அவரை ஜனாதிபதியாக்குவதா என்ற பிரச்சினை எமக்கு உள்ளது. அதேபோல தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்சினையும் உள்ளது" - என்றார். (த-44)

# இது தொடக்கமே தவிர இறுதியாட்டம் இல்லை

## கோலி சமாளிப்பு




டுபாய், ஒக். 26

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் கிடைத்த தோல்விக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்த கோலி, இது தொடக்கமே தவிர இறுதியாட்டம் இல்லை – என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நடந்த போட்டி மிகச்சிறந் தது என உங்களுக்குத் தெரியும். வெளியிலிருந்து யார் வேண்டுமானாலும் ஆலோசனைகள் தரலாம். என்னுடைய விருப்பமெல் லாம் களத்துக்கு வாருங்கள், விளை யாடிப் பாருங்கள் என்ன அழுத்தம் இருக்கிறது எனத் தெரியும்.

எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளமுடியாது, குறிப்பாக பாகிஸ்தானை எளிதாக எடுக்க முடி யாது. இன்றுள்ள சூழலில் உலகில் எந்த அணியையும் வீழ்த்தும் திறமை கொண்டது. இந்த ஆட்டத்துக்கு நாங்கள் மதிப்பளிக்க வேண்டும். இந்த ஒரு போட்டியில் கிடைத்த தோல்வியால் இந்த உலகமே எனக்கும், இந்திய அணிக்கும் முடிந்துவிட்டதாக நான் நினைக்கவில்லை.நாங்கள் எங்கள் திட்டத்தை சரியாக செயற்படுத்தவில்லை. வெற்றிக்குத் தகுதியானவர்கள் பாகிஸ்தான் அணியினர், எங்களைவிட அவர்கள் அனைத்துப் பிரிவுகளி லும் சிறப்பாகச் செயற்பட்டார்கள். பந்துவீச்சில் சிறப்பாகச் செயற் பட்டு தொடக்கத்திலேயே 3 இலக்குகளை வீழ்த்தினர். 20 ஓட்டங்களுக்கு நாங்கள் 3 இலக்குகளை இழந்தது சரியான தொடக்கம் அல்ல. நாங்கள் பந்துவீசும்போது விரைவாக இலக்குகளை வீழ்த்தத் திட்டமிட்டோம் முடியவில்லை – என்றார். (ம)

காணி தேவை

கோப்பாய் பகுதி, தெல்லிப்பளை, சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், வசாவிளான் பகுதிகளில் 25 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்பு: 076 221 2037

மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த கார்த்திகை 2 ஆம் பாதம் காரைநகரில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

Whatsapp / Viber +143 777 81050
077 403 0760

பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை காட்சி அறைக்கு ஆண் / பெண் பணியாளர்கள் தேவை. (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2863,077 618 3302

பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை நிலையத்துக்கு 18 வயது முதல் 28 வயதிற்குட்பட்டவர்கள் ஆண்/ பெண் பணியாளர் தேவை.
வெளிமாவட்ட ஆண்களுக்கு தங்குமிடம். உணவு இலவசம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

இசுறு சேல் சென்டர்
இல.62/35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
076 328 8032,071 976 6672



## சாலாவிடம் சரணடைந்தது மன்செஸ்டர் யுனைட்டெட்!


லண்டன், ஒக். 26

மொகமட் சாலாவின் அபார ஆட்டத்தால் 5:0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட்டை வீழ்த்தியது லிவர்பூல்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், ஆரம்பத்தில் இருந்தே லிவர்பூல் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் நெபியும், 13ஆவது நிமிடத்தில் தியாகோ ஜோட்டாவும் கோல்களைப் பதிவுசெய்ய நிலைகுலைந்தது மன்செஸ்டர். நட்சத்திர வீரர் மொகமட் சாலா 38ஆவது மற்றும் 45ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 4:0 என்று ஆதிக்கம் செலுத்தியது லிவர்பூல்.

50ஆவது நிமிடத்தில் சாலா மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட்டை ஊதியது லிவர்பூல். (ம)

## பாகிஸ்தானில் பட்டாசு கொளுத்தி மக்கள் நேற்றுக் கொண்டாட்டம்



இஸ்லாமபாத், ஒக். 26

இந்திய அணிக்கு எதிராக பாகிஸ்தான் பெற்ற வெற்றியை பட்டாசுகள் கொளுத்தி கொண்டாடியுள்ளனர் பாகிஸ்தான் மக்கள்.

உலகக்கிண்ண வரலாற்றில் இந்திய அணிக்கு எதிராக பாகிஸ்தான் பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும். இது வரை 12 ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றிபெற்ற இந்திய அணி நேற்று முன்தினம் தோல்வியடைந்தது. இதை அடுத்து இந்திய அணியின் தோல்வியையும் பாகிஸ்தானின் வெற்றியையும் பாகிஸ்தான் மக்கள் பட்டாசுகள் கொளுத்தி கொண்டாடித் தீர்த்துள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 01 . 1951



உதிர்வு 24 . 10 . 2021

### திருச்செல்வம் சிவஞானவடிவாம்பாள் (காந்தி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கலாசாலை வீதி 04ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் சிவஞானவடிவாம்பாள் (காந்தி) அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலங்கைநாயகம் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும், திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், சுசிலாதேவி காலஞ்சென்ற சகுந்தலாதேவி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகிர்தா (பிரான்ஸ்), சுரேஷ் (ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சுகந்தன், சுமணன் (கந்தவேள் களஞ்சியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), வாகினி (இ.போ.ச.கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமியும், லவணிக்கா (பிரான்ஸ்), ஹரினி, தேசிகன், ஹர்சிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மின்தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொ,பே.இல : 077 742 1128

தகவல் : குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.